ஆலயங்களுக்கு பாக்கித் தொகை 18 கோடி ரூபாய் அளவிற்கு மக்களிடமிருந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே இவைகளையும் கணக்கில் எடுத்து, சில 100 அல்லது 1000 தொழிலாளர்களுக்காக வாதிடும்போது' இப்படித் தர 'வேண்டியவர்களிடமிருந்து அவைகள் வருவதற்கும் வழி வகையை இந்த மன்றத்தின் மூலமாகக் கண்டுபிடித்துச் சொன்னால், இரண்டையும் சமன்படுத்தி, தமிழகத்தில் நல்ல நிலைமைகளை ஏற்படுத்த உதவியாக இருக்கும்.

(திரு. ஆ. நல்லசிவம் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் 2 வினாக்களுக்கு மேலே அனுமதிக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.

(2) திருச்சி மாவட்டம் கரூரை அடுத்த வெங்கமேட்டில் 11-8-1978 அன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து மாணவிகள் இறந்ததும் காயமடைந்ததும் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"திருச்சி மாவட்டம் கரூரை அடுத்த வெங்கமேட்டில் 11-8-78 அன்று பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்து மூன்று மாணவிகள் இறந்ததும், 29 பேர் காயமடைந்ததும் குறித்து"

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவரவர்களே, இது பற்றிய அறிக்கை (a) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்தார்கள், அதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன், அதைப்பற்றி ஏதாவது விளக்கங்கள் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு வினாக்களுக்கு அதிகமாகாமல் கேட்க வேண்டும். ஒன்றிலேயே முடித்துக்கொண்டால் நேரம் மிச்சமாகும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, நான் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையை இப்போதுதான் பார்த்தேன். இருந்தாலும் படித்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இடையிலே அவர் அப்படிச் சொல்லக் கூடுமென்பதால் முன்கூட்டியே ஒட்ட

(a) 502-504 ..ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாகப் பார்த்தேன். அதிலே, வெங்கமேட்டிலே சூறாவளிக் காற்று அடித்ததாக—அதாவது அதிகாரிகள் தந்த அறிக்கையிலே—சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே பொது மக்களுக்குத் தெரியாமல், அரசியல் கட்சிகளுக்குத் தெரியாமல், ஆசிரியர்களுக்குத் தெரியாமல் மாணவ கண்மணிகளுக்குக்கூடத் தெரியாமல் சூறாவளிக் காற்று அடித்திருக்கிறதென்பது இந்த அறிக்கையின் மூலம் தெரிகிறது. அங்கே எல்லாத் தரப்பினரும், மழை பெய்ததாகக்கூடச் சொல்லவில்லை. சூறாவளிக் காற்று அடிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தேன். 3 மாதங்களுக்கு முன்னே கட்டப்பட்ட கட்டிடம் அது. 3,000 ரூபாய் செலவிலே கட்டப்பட்டதாக தொகை காட்டும். ஆனால் 3,000 ரூபாய் செலவிலே அது கட்டப்படவில்லை என்று விசாரித்த வகையிலே எங்களுக்குத் தெரிய வருகிறது. அதிகாரிகள் இப்படிப் பட்ட அறிக்கைகளைத் தந்து, இந்த ஆட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்துவார்களென்பதை அமைச்சரவர்கள் கவனித்து, இது குறித்து நீதி விசாரணை ஒன்றை ஏற்படுத்தி, அதற்குரிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா? அங்கே மாணவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 2,000 ரூபாய்....

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விளக்கம் வேண்டுமென்றால் வினாவாகத்தான் கேட்க வேண்டும். சொற்பொழிவு நிகழ்த்தக் கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே எண்ணூரில் நடந்த படகு விபத்தில் இறந்துவிட்ட குழந்தைகளுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாய் அளிக்கப்பட்டதாக அறிகிறேன். எனவே அவர்களுக்கும் 5,000 ரூபாய் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் காயம் பட்டவர்களுக்கும் உடனடியாக ஏதாவது சிறு தொகை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சூறாவளிக் காற்று அங்கே வீசவில்லை என்று குறிப்பிட்டார்கள். சூறாவளி திடீரென்று ஏற்பட்டு, திடீரென்று மறைந்து விடும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் போய்ப் பார்க்கும்போது, அங்கே சூறாவளிக் காற்று இருக்க நியாயமில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அங்கே நேரடியாகச் சென்று, இடத்தைப் பார்த்து' அந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடம் 3,000 ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்படாமல், அதிலே தவறு நடந்திருக்குமானால், நெடுஞ்சாலை ஆராய்ச்சித் துறை அந்தக் கட்டிடத்தின் வலிவுத் தன்மையைக் கண்டறிந்து, 15 நாட்களுக்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும்

நடைபெற்று வருகிறது. அதைப்போல இறந்து போன குழந்தை களின் குடும்பங்களுக்கும், காயம்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் எந்த அளவுக்கு நிதி உதவி அளிக்க முடியுமோ, அது அளிப்பது குறித்த கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சூறாவளிக் காற்று அங்கே வீசிய தால், வேறு எந்தப் பகுதியிலாவது சிறு சேதமாவது ஏற்பட்டி ருக்கிறதா ?

திரு. ஆ. நல்லசிவம் : நானும் அது குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன. அந்தப் பள்ளிக்கூடம் குழந்தைகள் தங்கு வதற்கு ஏற்றதுதானா என்பதற்கு ஏதாவது சர்ட்டிபிகேட் பெறப் பட்டிருக்கிறதா ? அதை அரசு கவனித்ததா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவரவர்களே, 8ஆம் தேதியன்று. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள். அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. நல்லசிவம் அவர்கள்

(3) சென்னை அம்பத்தூரிலுள்ள சதர்ன் ஸ்விட்ச்கியர் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. ஆ. நல்லசிவம் : மேலவைத் தலைவரவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர வர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

> '' சென்னை அம்பத்தூரிலுள்ள சதர்ன் ஸ்விட்ச்கியர் நிறுவனத்தில் உள்ள இயக்குநர்களின் உட்பூசலால் அந்தத் தொழிற்சாலை கடந்த 8 மாத காலமாக மூடப்பட்டு, அதில் பணிபுரியும் சுமார் 500—க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களின் குடும் பங்களும் பட்டினியால் அவதியுறும் பதட்டநிலை குறித்து ''

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவரவர்களே, '' தி சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட் '' என்பது சென்னைக்கருகிலுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒரு பொறியியல் தொழில் நிறுவனம்.